அதுபோன்ற நபர்களைப் புதிதாக அரசுப் பேருந்துகளில் அமர்த்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களின் புதுமையான ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரராஜ் அவர்கள் அவர்களுக்குரிய இருக்கையில் அமர்ந்து கேட்க வேண்டும்.

*வினா எண் 53—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர்களுக்கு வீடு கொடுக்கப் பட்டுள்ளது?

(இ) வீடு கிடைக்காதவர்கள் யாராவது உண்டா?

(ஈ) அவர்களுக்கு எப்போது கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) & (ஆ) கோவையில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களில் 36 பேருக்கு பல்லவன் போக்குவரத்துக் கழக குடியிருப்பில் வீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) உண்டு.

(ஈ) வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி, வீடுகள் கட்டித் தரும் திட்டம் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தை அமுல் செய்யும் போது மற்ற தொழிலாளர்களும் வீடு கட்டிக் கொள்ள ஏதுவாகும்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத் தின்கீழ், கோவையில் வீடுகள் நிறையக் கட்டும்படியான திட்டங்கள் உள்ளன. அவை கட்டப்பட்டும் வருகின்றன. அந்த

1978 செப்டம்பர் 2]

ஊழியர்களுக்கு கூட்டுறவுத் துறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் வரையில், பல்லவன் போக்குவரத்துத் துறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கிற வரையிலும் அந்த வீட்டு வசதி வாரியத்திலே கட்டப்படுகிற வீடுகளை இவர்களுக்கு நிர்ணயித்துக் கொடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, கோவையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், கட்டப் படுகின்ற வீடுகள், ஏற்கனவே சிலருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு 236 பேர்களுக்கு, ஹட்கோ மூலமாக உதவி பெற்று, வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், 36 பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்க விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களும் அதற்கான ஏற்பாடுகளை ஆர்வமுடன் செய்து வருகிறார்கள்.

திரு. கே. பண்ணை சேதுராம்: பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களில் சிலருக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதாகவும் இன்னும் பலருக்கு கட்ட இருப்பதாகவும் அமைச்சரவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப்போல, சேரன், சோழன், பாண்டியன், கட்டபொம்மன், அண்ணா, தந்தை பெரியார் ஆகிய போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு மட்டும் தனிப் பாகுபாடு என்ற எண்ணம் இல்லை. அனைத்துப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் இச்சலுகைகளை அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே, கோவையில், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் 36 தொழிலாளர்களுக்குத்தான் வீட்டு வசதி இருக்கிறது. பாக்கி

[1978 செப்டம்பர் 2

யிருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுக்க முயற்சிகள் செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த வீடுகள் எவ்வளவு காலத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டு, அந்த ஊழியர்களைக் குடியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, காலத்தை நிர்ணயித்துக் கூறுவது அவ்வளவு சரியாக இராது. ஆனால் மிக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. இ. தமிழரசன்: தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் வேலையிலிருப்பவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டம் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதுபோல், தனியார் பேருந்துகளில் பணியாற்றுபவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட பரிசிலனை இல்லை. தனியார்கள் மனமுவந்து அப்பணியினை மேற்கொள்வார்களானால் அரசு வரவேற்கும்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, காலத்தை நிர்ணயிக்க முடியாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். எதற்குமே காலக் கெடு இருக்க வேண்டும். ஓராண்டில், ஈராண்டில் வீடுகள் கிடைக்கும் என்று ஊழியர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, துரிதமாகக் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான நிதி தமிழக அரசிடம் இல்லை. போக்குவரத்துக் கழகங்களிடம் இல்லை. மத்திய அரசு ஹட்கோ மூலமாக, நிதி உதவி செய்கிறது. அந்த உதவியைக் கொண்டு தான் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கூட பல இடங்களில் இதுபற்றிக் கூறியிருக்கிறார்கள். அவருடைய பெருமுயற்சி விரைவில் பலன் தரும் என்று நம்புகிறேன்.

1978 செப்டம்பர் 2]

திரு. கு. ரமணி: 200 பேர்களுக்கு இன்னும் வீடில்லாமல் இருக்கிறது என்பது அமைச்சர் பதிலிலிருந்து தெரிய வருகிறது. அந்த ஊழியர்கள் குறிப்பிட்ட நேரத்தில், காலை 5 மணியிலிருந்து வேலைக்கு வரவேண்டியவர்கள். ஆகவே, வீட்டு வசதி வாரியத்தின் கீழ் பல வீடுகளை, அவர்களுக்கு இறுதியாக வீடு கட்டிக் கொடுக்கும் வரையில், தற்காலிகமாக ஒதுக்கிக் கொடுத்து உதவி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்தக் கேள்வியினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரிடம் கேட்டிருக்க வேண்டும். இருப்பினும் அந்த வீடுகளுக்கு முன்னுரிமையோடு பலர் காத்திருப்பதால், பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய சாத்தியக் கூறு இராது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தென்பெண்ணை ஆற்றுப் பாசனக் கால்வாய்கள்

* வினா எண் 54—**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்பெண்ணை ஆற்றின் கரை ஓரத்தில் இடது-வலது புறம் செல்லும் பாசனக் கால்வாய்களைச் சீரமைத்துத் தர அரசு ஏதேனும் செயல் திட்டம் வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எப்பொழுது சீரமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) & (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, தென்பெண்ணையாற்றின் வற்றாத நீரைப் பயன்படுத்தி பாசனத்தை வளப்படுத்த அரசு ஏதேனும் புதிய திட்டத்தை வகுத்திருக்கிறதா? அப்படியென்றால், அதைப்பற்றி தீவிரமாக ஆராயுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தென்பெண்ணையாற்றிலிருக்கிற அணைக்கட்டுக்குக் கீழுள்ள எல்லாப் பாசனக் கால்வாய்களையும் சீரமைத்து